**கவனிக்க.**- 2007.05.25 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் பகுதி IV (ஆ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1500 - 2007 ජූනි 01 වැනි සිකුරාදා - 2007.06.01

1500 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 428 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 429 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டமூலம் 2007, மே மாதம் 04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) கொறியன்-லங்கா சர்வதேச பௌத்த நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2007, மாச்சு மாதம் 30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, யூன் 08 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, மே 25 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கைப் புகையிரத சேவைகள்

### இலங்கைப் புகையிரதப் பகுதிக்கு Two Track Motor Cars (One with crane and power winch and the other with backhoe and power winch) and eleven (11) Trolleys - வழங்குதல்

தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்வனவுக் குழு, போக்குவரத்து அமைச்சு இல. 1, டீ. ஆர். விஜேவர்த்தன மாவத்த, கொழும்பு 10, இலங்கையில் Two Track Motor Cars (One with crane and power winch and the other with backhoe and power winch) and eleven (11) Trolleys - வழங்குவதற்கான கேள்விகள் உற்பத்தியாளர்கள்/ விநியோகத்தரிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஒப்பந்தக்காரர்கள் தமது விலைமனுக்களை நேரடியாகவோ அல்லது இலங்கையிற் பதிவு செய்யப்பட்டவர்களும், அதிகாரத் தத்துவம் பெற்றவர்களுமான அங்கீகரிக்கப்பட்ட முகவர்களினூடாகச் சமர்ப்பிக்கலாம்.

2. மீளப்பெறப்பட்ட முடியாத கேள்விப்பணமாக ரூபா 5,000 ஐ அல்லது அதற்குச் சமமான இலகுவாக மாற்றீடு செய்யக்கூடிய தொகையைச் செலுத்துவதன் மூலம் புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் காரியாலயம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களிலிருந்து 2007.04.26 இலிருந்து 2007.06.26 வரையிலான சாதாரண வேலை நாட்களில் 09.30 மணி நேரத்திற்கும் 15.30 மணி நேரத்திற்கும் இடைப்பட்ட நேரத்தில் (இலங்கை நேரம்) பெறப்படும் கேள்விப் பத்திரங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. உற்பத்தியாகும் Track Motor cars with crane/ Backhoe and power winch and trolleys ஐ.எஸ்.ஓ. 9001:2000 கம்பனி சான்றிதழுக்கு அமைவானதாக அல்லது அதற்குச் சமமான சர்வதேச தர முகாமைத்துவ முறைமை நியமனத்துக்கு உரித்தானதாக இருத்தல் வேண்டும்.

4. கேள்விகள் 2007.06.27 ஆந் திகதி 14.00 மணி நேரத்திற்கு (இலங்கை நேரம்) மூடப்படும். சீலிடப்பட்ட கேள்விகளை பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிப்பதன் மூலமாகவோ பின்வரும் முகவரியிற் சமர்ப்பிக்கலாம் :-

தலைவர்,
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்வனவுக் குழு,
மே./பா. செயலாளர்,
போக்குவரத்து அமைச்சு,
இல. 1, டீ. ஆர். விஜேவர்த்தன மாவத்த,
கொழும்பு 10,
இலங்கை.

போக்குவரத்து அமைச்சு அல்லது புகையிரத திணைக்களம் பதிவுத் தபாலின் தாமதத்திற்கு பொறுப்பேற்கமாட்டாது.

5. போக்குவரத்து அமைச்சு, இல. 1, டீ. ஆர். விஜேவர்த்தன மாவத்த, கொழும்பு 10 இல் 2007.06.06 ஆந் திகதி 10.00 மணி நேரத்தில், கேள்விக்கு முந்திய கூட்டம் நடைபெறும்போது, அவசியமான தெளிவுபடுத்தல்களையும், செய்திகளையும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஒப்பந்தக்காரர்கள், கேள்விப் பத்திரங்களை கேள்விக்கு முந்திய கூட்டம் நடைபெறும் முன்னர் பெற்றுக்கொள்ளும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

6. மேலே பந்தி (04) இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் கேள்விகள் திறக்கப்படும். கேள்வி ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் கேள்விகள் திறக்கப்படும்போது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. கேள்விப் பத்திர ஆவணங்களை எந்தவித கட்டணங்களுமின்றி புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் காரியாலயம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கையில் பரிசீலிக்கலாம்.

6. மேலதிக விபரங்களுக்குத் தயவுசெய்து பின்வரும் முகவரியிற் தொடர்புகொள்ளவும் :-

புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர்,
புகையிரதக் களஞ்சியத் திணைக்களம்,

த. பெ. இல. 1347,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.
தொலைபேசி இலக்கங்கள் : 94(11)2432044 அல்லது 94(11)2436818
பக்ஸ் இல. : 94(11)2432044
மின் - அஞ்சல் : srs@sierra.lk

தலைவர்,
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட
கொள்வனவுக் குழு.

கேள்வி இல. எஸ். ஆர். எஸ்./எவ். 6592

6-01

---

## இலங்கைப் புகையிரத சேவைகள்

### இலங்கைப் புகையிரதப் பகுதிக்கு One set of Synchronized screw jacks (in order to provide new workshop facility for wagon maintenance at Colombo) வழங்குதல் -கேள்வி இல. எஸ். ஆர். எஸ்./எவ். 6539

தலைவர், திணைக்கள கொள்வனவுச் சபை, இலங்கைப் புகையிரத சேவைகள், புகையிரத தலைமையகம், த. பெ. இல. 355, கொழும்பு 10, இலங்கையில் One set of Synchronized screw jacks வழங்குவதற்கான கேள்விகள் உற்பத்தியாளர்கள்/விநியோகத்தரிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஒப்பந்தக்காரர்கள் தமது விலைமனுக்களை நேரடியாகவோ அல்லது இலங்கையிற் பதிவு செய்யப்பட்டவர்களும், அதிகாரத் தத்துவம் பெற்றவர்களுமான அங்கீகரிக்கப்பட்ட முகவர்களினூடாகச் சமர்ப்பிக்கலாம்.

2. கேள்விகள் 2007.06.28 பிற்பகல் 2.00 மணிக்கு (இலங்கை நேரம்) மூடப்படும்.

3. மீளப்பெறப்பட்ட முடியாத கேள்விப்பணமாக ரூபா 2,500 ஐ அல்லது அதற்குச் சமமான இலகுவாக மாற்றீடு செய்யக்கூடிய தொகையைச் செலுத்துவதன் மூலம் புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் காரியாலயம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களிலிருந்து 2007.06.26 பி. ப. 3.00 மணிவரை (இலங்கை நேரம்) பெறப்படும் கேள்விப் பத்திரங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. இலங்கைப் புகையிரத தலைமையகம், ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கையில் கேள்விகள் திறக்கப்படும். கேள்வி ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் கேள்விகள் திறக்கப்படும்போது சமூகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. சீலிடப்பட்ட கேள்விகளை பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாக கையளிப்பதன் மூலமாகவோ பின்வரும் முகவரியிற் சமர்ப்பிக்கலாம் :-

தலைவர்,
திணைக்கள கொள்வனவுச் சபை,
இலங்கை புகையிரத சேவைகள்,
புகையிரத தலைமையகம்,
ஓல்கொட் மாவத்தை,
கொழும்பு 10, இலங்கை.

6. கேள்விப்பத்திர ஆவணங்களை எந்தவித கட்டணங்களுமின்றி புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகம், ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10 இலங்கையில் பரிசீலிக்கலாம்.

7. மேலதிக விபரங்களுக்குத் தயவுசெய்து பின்வரும் முகவரியிற் தொடர்புகொள்ளவும் :-

புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர்,
புகையிரதக் களஞ்சியத் திணைக்களம்,
த. பெ. இல. 1347,
ஓல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

தொலைபேசி இலக்கங்கள் : 94(11)2432044 அல்லது 94(11)2436818

தலைவர்,
திணைக்கள கொள்வனவுச் சபை.

தொடர்பு இலக்கம் : எஸ்.ஆர்.எஸ்./எவ் 6539

6-02

---

# ஏல விற்பனைகள்

**வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி - ஹட்டன் கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

**பெறுமதிவாய்ந்த வீட்டுச் சொத்து பகிரங்க ஏலவிற்பனை**

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோரளே, ராகம்பத்துவே கந்தான நகர சபை எல்லைக்குள் கந்தானையில் அமைந்துள்ள போகஹதொடுபளை வீதி, 63/11 என்னும் இலக்க வரிமதிப்பீட்டைக் கொண்டதும் கோங்கஹவத்த என அழைக்கப்படுவதுமான காணியில் இருந்து உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எம். டி. ஜே. வி. பெரேராவினால் தயாரிக்கப்பட்ட 1978.10.28 ஆந் திகதிய 4757 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 2 எனக் காட்டப்பட்டுள்ளதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். சொல்லப்பட்ட 4757 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் காணித்துண்டு 6 இன் மீதும் அதன் வழியேயான பாதை உரிமையுடனும் சேர்த்து.**
**(காணியின் விஸ்தீரணம் : 9.80 பேர்ச்சஸ்)**

கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். டீ. என். பிரனாந்து என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1993.03.26 ஆந் திகதிய 127 ஆம் இலக்க முறியின்மீது வருமதியான கொடுப்பனவில் செல்லய்யா ஞானசேகரனும், வைமன் இனோகா பொன்ஸ்டினா கடனாளர்களாக தவணை தவறியுள்ளார்களாதலாலும். ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட்டால் என்மீது வழங்கப்பட்டுள்ள அனுமதியின்கீழ் வங்கிக்குக் கிடைக்க வேண்டிய கடன் பணத்தொகையையும் வேறு இறுப்பனவுகளும் ஏலவிற்பனைச் செலவுகளும் உட்பட எல்லாச் செலவுகளையும் பெற்றுக்கொள்வதற்காக கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சொத்தை 2007 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அது அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்கப்படும்.

**தீர்மானம் பற்றி அறிவித்தல்களுக்கான.-** 2003.10.10 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2003.11.24 ஆந் திகதிய "திவயின", "ஐலண்ட்", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்திற்குச் செல்லும் பாதை.-** கநான பள்ளி வீதியில் உஸ்வத்த சந்தியால் இடதுபுறம் திரும்பி போகஹ தொடுபொல வீதியில் இலக்கம் 63/11 இல் உள்ள சொத்தாகும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.-** ஏலவிற்பனையின் இறுதியில் உத்தேசக் கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்களைப் பணமாகச் செலுத்துதல் வேண்டும் :

(1) கொள்வனவு விலையின் 10 % ;

(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்த வேண்டிய விற்பனை வரி 1% ;

(3) ஏலதாரரின் தரகுப்பணமாக கொள்வனவு விலையின் 2 1/2%;

(4) விற்பனைப் பத்திரத்தைத் தயாரிப்பதற்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000 ;

(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500.

விலைக்கு வாங்கிய பணத்தின் 90% மிகுதிப் பங்குப் பணத்தை ஏலவிற்பனைத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் "கொழும்பு 10, டி. பி. ஜாயா மாவத்தை, இலக்கம் 479, ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பிரதான காரியாலயத்தில் சிரேஷ்ட முகாமையாளர் (கடன் மேற்பார்வையாளரும், மீட்டுப் பெறுபவரும்)" க்கு செலுத்ததப்பட வேண்டும். தொலைபேசி இலக்கம் 2661815, 2661819. 30 நாட்களுக்குள் மிகுதிப் பணத்தைச் செலுத்தாவிட்டால் தற்போது செலுத்தியுள்ள கொள்வனவு விலையில் 10% மீண்டும் திருப்பிச் செலுத்தாமல் இருப்பதற்கும், மீண்டும் சொத்தை விற்பதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.

உரிமைப் பத்திரங்களுக்கும் வேறு ஆவணங்களுக்கும் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட்-ஹட்டன் கிளையினால் தொலைபேசி இலக்கம் 051-2222554 அல்லது மேலே குறிப்பிட்டுள்ள பிரதான காரியாலயத்தில் சட்ட செயலாளரிடம் பெற்றுக்கொள்ள முடியும்.

என். எச். டி. எவ். ஆரியரத்ன,
நீதிமன்ற ஆணையாளரும் மதிப்பீட்டாளரும்
உத்தரவு பெற்ற ஏலவிற்பனையாளரும்.

இல. 34/31 மற்றும் 32,
நீதி சட்டத்தரணிகள் அலுவலகத் தொகுதி,
புதுக்கடை,
கொழும்பு 12.

6-40

---

## வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி – அம்பலாங்கொடை கிளை

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பெறுமதி மிக்க சொத்து பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்

காலி பிரசித்த நொத்தாரிசு ஜீ. டேவிட் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கிப் பெயரால் எழுதப்பட்டதுமான 2000.04.11 ஆந் திகதியதும் 1792 ஆம் இலக்க முறியின்கீழ் வருமதியான கொடுப்பனவில் தோன் மொஹான் அஜந்த உடலமத்த கமகே கடனாளராக தவணை தவறியுள்ளாராதலாலும் வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி என்மீது அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் கீழே குறிப்பிடப்படும் சொத்து அமைந்துள்ள இடத்திலேயே 2007 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு ஆரம்பித்து என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

தென் மாகாணம், காலி மாவட்டம், காலி பென்தொட வலல்லாவிட்ட கோரலே, நவதகல என்னும் இடத்தில் "கந்த அத்தாவத்த" என்ற பெயரால் அழைக்கப்படும் இடத்தில் அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் டி. ஈ. மஹவிதான என்பவரால் 1960 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதி அளந்து வேறாக்கப்பட்ட 772 A என்ற வரைபடத்தின் பிரகாரமும் பலபிட்டிய வழக்கு இலக்கம் என். பீ. 962 வரைபடத்தின் பிரகாரம் அளந்து வேறாக்கப்பட்ட லொட் 1 என்ற காணித்துண்டு. அதன் விஸ்தீரணம் 2 றூட் 3.5 பேர்ச்சஸ்.

**தீர்மான அறிவித்தலுக்காக.**- 2007.02.15 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2007.02.27 ஆந் திகதி "ஐலண்ட்", "திவயின" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- ஏலவிற்பனை முடிவில் வெற்றிபெற்ற கொள்வனவாளர் கீழே குறிப்பிடப்பட்ட கட்டணங்களைப் பணமாகச் செலுத்துதல் வேண்டும் :

(1) கொள்வனவு விலையில் 10 % ;

(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்த வேண்டிய கட்டணம் 1%;

(3) ஏலவிற்பனையாளரின் தரகுப்பணம் 2 1/2% ;

(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் 500 ;

(5) வேறு செலவினங்கள் ;

(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தப்பட்ட கட்டணம் ரூபா 2,000.

விலைக்கு வாங்கிய பணத்தில் 90% பங்குப் பணத்தை 30 நாட்களுக்குள் வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கிக்கு செலுத்துதல் வேண்டும். 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறின் ஏற்கனவே செலுத்திய 10% த்தைத் திருப்பிச் செலுத்தாமல் இருக்கவும் சொத்தை மீள விற்பதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.

உரிமைப்பத்திரங்களுக்கும் மேலதிக விபரங்களுக்கும் "முகாமையாளர் வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி, இலக்கம் 479, டி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி இலக்கம் 2661815, 2661816" இன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

என். எச். டி. எம். ஆரியரத்ன,
நீதிமன்ற ஆணையாளரும் அதிகாரம்
பெற்ற ஏலவிற்பனையாளரும்.

இல. 34/31 மற்றும் 32,
நீதி சட்டத்தரணிகள் அலுவலகத் தொகுதி,
கொழும்பு 12.

6-41

### வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்*

கணக்கு இல. : 0007 1001 1478–டோரான் மேன்டெனன்ஸ் சர்விசஸ்

05.09.2003 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியிலும் 2003.07.31 ஆந் திகதிய "தினமின", "டேலி நியுஸ்", மற்றும் "தினகரன்" எனும் பெயரிலான தினசரி செய்திப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் 2003.01.30 ஆந் திகதியிடப்பட்ட, வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற் கமைய, எட்டு இலட்சத்து இருபத்தையாயிரத்து எண்நூற்று பத்தொன்பது ரூபா அறுபத்தொன்பது சதம் (ரூ.8,25,819.69) ஐ மேலும் 2002, நவெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதிவரை ஏழு இலட்சத்து தொண்ணூறாயிரத்து அறுநூற்று முப்பத்திரண்டு ரூபா நாற்பத்தைந்து சதம் (ரூ. 7,90,632.45) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு இருபத்து மூன்று சதவீத (23%) வட்டியுடனும் உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட் டுள்ள ஆதனத்தை, கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யு. ஜயசூரிய அவர்களால் 18.06.2007 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு சொத்து அமைந்த இடத்தில் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்ய வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது."

#### அட்டவணை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாத்த தும்பர, உடகம்பஹ கோரளையில் நத்தரம்பொத்தயில் அமைந்த (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். எம். தல்வத்த அவர்களால் தயாரிக்கப்பட்டு 1963, சனவரி 21 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 1235 இல் துண்டு 4ஊ 2 மற்றும் 1962, ஒற்றோபர் 28 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 1194 இல் துண்டு 4ஈ) படிவத்த மற்றும் கஹவத்த எஸ்டேட் என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. எம். எஸ். பீ. கருணாரத்ன அவர்களால் தயாரிக்கப்பட்டு 1984, யூலை 15 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 783 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 3ஏ என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் மேலும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. ஆர். டபிள்யு. எம். வீரகோன் அவர்களால் 1985 நவெம்பர் 26 ஆந் திகதி மேற்கூறப்பட்ட துண்டு 3ஏ கீழ் பிரிக்கப்பட்டு அதன்கண் அமைந்த பயிர்கள் மற்றும் சகலதுடன் மேற்கூறப்பட்ட துண்டு 3ஏ இன் எல்லைகளாவன– வடக்கில் : இல. 2 என அடையாளமிடப்பட்ட துண்டு மற்றும் மேற்கூறப்பட்ட நிலஅளவை வரைபடத்தில் விஸ்தரிக்கப்பட்ட வழி ; கிழக்கில் : மேற்கூறப்பட்ட நிலஅளவை வரைபடத்தில் விஸ்தரிக்கப்பட்ட அரங்கல இல் இருந்து நத்தரம்பொத்த வரையுள்ள வீதி தெற்கில் : அரங்கலையிலிருந்து நத்தரம் பொத்த வரையுள்ள வீதி மற்றும் மேற்கூறப்பட்ட நிலஅளவை வரைபடத்தில் விஸ்தரிக்கப்பட்ட துண்டு 3பி ; மற்றும் மேற்கில் : ஓடை மற்றும் மேற்கூறப்பட்ட நிலஅளவை வரைபடத்தில் விஸ்தரிக்கப்பட்ட துண்டு 3பி இன் ஒரு பாகம் மற்றும் அதே காணியின் மிஞ்சிய பாகம் என்பவையாகும். மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 783 இற்கமைய இந்தக் காணி பதினைந்து தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 15.5பே.) விஸ்தீரணமுடையது. இந்தக் காணி கண்டி காணி பதிவகத்தில் தொகுதி /பக்கம் ஈ 701/ 109 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளையின்படி,

கம்பனிச் செயலாளர்.

6-76

---

### செலான் வங்கி லிமிட்டெட் – குருநாகல் கிளை

*1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

#### ஆதனம் ஏலவிற்பனை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வேஉட வில்லி ஹத்பத்து, திரகந்தஹே கோரளையில் அமைந்துள்ள வில்கொட தோட்டம் என்றழைக்கப்படுகின்ற அனுமதிபெற்ற நிலஅளவையாளர் பீ. பீ. திஸாநாயக்கவினால் அளந்து எல்லைகள் வரையறை செய்யப்பட்ட வரைவு இலக்கம் 654 மற்றும் 1990, சனவரி 03 ஆந் திகதியிடப்பட்ட துண்டு இல. 02 கொண்ட இருபத்தி இரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 22பே.) பரப்பளவு கொண்ட பெறுமதிவாய்ந்த காணி மற்றும் அதில் உள்ள மரம், செடி, கொடிகள் மற்றும் கட்டிடங்கள் அடங்கலாக உள்ள காணி. மேற்படி காணி குருநாகல் காணிப்பதிவகத்தில் ஏ1186/ 198 இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடன்பட்டார் என்ற வகையில் குருநாகலையைச் சேர்ந்த ஹிட்டிஹாமிலாகே கபிலசிரி ஹேரத் என்பவருக்கு வழங்கப்பட்ட சலுகைகளுக்காக செலான் வங்கி லிமிட்டெட்டிற்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.

மேலே விவரிக்கப்பட்ட காணியை நான், 2007 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற வழி**.– நீர்கொழும்பு வீதியில் புவக்கஸ்சந்திவரை (1/2 மைல்) தூரம் சென்று வலது பக்கமாகத் திரும்பி வில்கொட வீதியில் நிஸ்ஸங்கபுர சந்தி வரை (3/4மைல்) சென்று அங்கே உள்ள வீடமைப்புத்திட்டம் (நிஸ்ஸங்கபுர) வீதியில் வங்கி அமைந்துள்ள இடத்திலிருந்து சுமார் 11/2 மைல் தூரம் சென்று குறித்த சொத்தை அடையலாம்.

**மேலதிக விபரங்களுக்கு**.– 2006.03.24 ஆந் திகதியின் அரச வர்த்தமானி மற்றும் 2006.01.30 ஆந் திகதிய "டெயிலி மிரர்", மற்றும் "லங்காதீப" மற்றும் 2006.08.17 ஆந் திகதிய "வீரகேசரி" நாளிதழ்களையும் பார்க்கவும்.

**கட்டணம் செலுத்தும் முறை**.– வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் பின்வரும் தொகைகளைக் காசாக செலுத்தல் வேண்டும்.–

கொள்வனவு விலையின் பத்துவீதம் (10%) ; விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய ஒரு வீதம் (1%) ;

ஏலதாரர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2%) ; விற்பனை நிலத்துக்கான நொதாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2000 இலிகிதர் மற்றும் கூவுவோர் கூலி ரூபா 500 ; விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு ; கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி லிமிட்டெட்டில் வைப்புச் செய்தல் வேண்டும்.

காணி உறுதி மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை "கொழும்பு 3, காலி வீதி, இல.90, செலான் வங்கி லிமிட்டெட், பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்)" இடமிருந்து பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011- 2456258, 2456263, 2456284.

துசித கருணாரத்ன (ச. நீ.),
அனுமதிபெற்ற அளவையாளர்,
நீதிமன்ற ஆணையாளரும், மதிப்பீட்டாளரும்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவ,
தொலைபேசி இல. 2696155, 2572940.

6- 87

---

**மக்கள் வங்கி - குருநாகல் கிளை**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

**வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வேவுட வில்லி ஹத்பத்துவ, திரகந்தஹய கோரளை, "பெல்கொட எஸ்டேட் எனும் பென்மன்ட் குரூப்" என்ற காணிக்கு 1997.09.05 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 2377 ஆம் இலக்க வரைபடத்தின் 02 ஆம் இலக்க காணியின் பரப்பளவு மூன்று ஏக்கர், ஒரு றூட், ஏழு தசம் ஐந்து பேர்ச்சு (03ஏ.01றூ.7.5பே.) விஸ்தீரணம் கொண்டது. அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழவகை கட்டிடம் உட்பட அனைத்தும் அடங்கலாக ஏலவிற்பனை**

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், 2007.06.22 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு குறிப்பிட்ட சொத்து அமைந்துள்ள இடத்தில் என்னால் பிரசித்த ஏல விற்பனை செய்யப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 2002. 05. 31 ஆந் திகதி இலங்கை அரசின் வர்த்தமானியையும் 2004. 12. 14 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", 2004.12.03 ஆந் திகதிய "தினமின",2004.12.14 ஆந் திகதிய "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்குச் செல்லும் பாதை.**- குருநாகல்-கொழும்பு பிரதான பாதையில் தம்பொக்கை வரைசென்று கட்டுபிடிய ஊடாக ரம்புக்கனை பாதையில் 3/1 ஆம் இலக்க பாலத்தருகே கொஸ்கொல்ல சந்தியின் அரசமரத்தடியால் இடது பக்கமிருக்கும் மாவத்தகமைப்பாதையில் 03 கிலோ மீட்டர் அளவு சென்றவுடன் பொல்கொட எஸ்டேட் அருகால் வலது பக்கம் இருக்கும் கிரவல் பாதையால் சென்று பெரிய வலைவினருகால் நேரே சென்று பரிபாலிக்கப்படாமல் இருக்கும் பாதையால் செல்லும் போது இந்த ஆதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏல விற்பனையின் முடிவின் போது சொத்தை விலைக்கு வாங்கிய நபர் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு கொடுப்பனவை பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) தாம் வாங்கிய விலையின் 10% த்தையும் ;

(2) உள்ளூராட்சி அதிகார சபையினதும் பிரதேச சபையினதும் 1% வரியையும் ;

(3) ஏலவிற்பனையாளரின் பங்காக ஏலவிற்பனை தொகையின் 2 1/2 % கமிசனையும் ;

(4) எழுதுவினைஞர்களினதும் அறிவிப்பாளர்களினதும் கட்டணமாக 500 ரூபாவையும் ;

(5) விற்பனை செலவும் மற்றும் ஏனைய செலவுகள் இருப்பின் அந்தப் பணத்தையும் ;

(6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரை கட்டணத்தையும்.

விலைக்குவாங்கிய பணத்தின் மிகுதி 90% வீத பங்குப்பணத்தை ஏல விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் குருநாகல் "மக்கள் வங்கி - பிரதேச பிரதான முகாமையாளர்" இடம் செலுத்தப்படல் வேண்டும். தொலைபேசி இல. : 037 - 2222453, பெக்ஸ் இல. 037 - 2222338.

உரிமைப்பத்திரம், மேலதிக விபரங்களை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் பெற்றுக் கொள்ள முடியும்.

மேற்குறிப்பிட்டுள்ளபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத்தவறின் ஏற்கனவே செலுத்திய பணத்தின் 10% தையும் திருப்பிச் செலுத்தாமலிருக்கவும் மீண்டும் சொத்தை விற்பதற்கும் வங்கிக்கு உரிமையுண்டு.

நீதிமன்ற ஆணையாளர்,
உத்தரவு பெற்ற ஏலதாரர்,
மதிப்பீட்டாளர்.

இல. 28, "புதியசட்டத்தரணிகள் கட்டிடத்தொகுதி",
குமாரதுங்க மாவத்தை,
குருநாகல்.
தொலைபேசி இல. : 037-2220062

6-99

---

**இலங்கை வங்கி**

1968 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை

**சொத்து, நிலமனை ஏலவிற்பனை**

இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 23. 03. 2007 ஆந் திகதிய 1490 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 14. 03.07 ஆந் திகதி "தினமின",

"தினகரன்" பத்திரிகைகளிலும் 14.03.07 ஆந் திகதிய "டெய்லிநியூஸ்" பத்திரிகையிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 ன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் No. 290 ஹவலக்றோட், கொழும்பு 05 என்னும் முகவரியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர்கள் நவீந்திர சமரவிக்கிரம 27.06.2007 ஆந் திகதி மு. ப. 11 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**காணிச்சொத்தின் விவரணம்**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளை அதிகாரிபற்றுவில் முல்லேரியாவ கொட்டிகாவத்த பிரதேச சபை எல்லைகளுள் முல்லேரியாவில் அமைந்த தெல்கஹவத்த என அழைக்கப்படும் காணி. உத்தரவுபெற்ற நில அளவையாளர் அனில் நவகமுவ தயாரித்த 2004, மே 12 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1860 இல் துண்டு 2 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு – வடக்கில்: மல்லிகா ஜயலத்தின் காணியும் வரைபடம் இல. 1860 இல் அதே காணியின் துண்டுகள் 1 மற்றும் 2 உம்; கிழக்கில்: உத்தரவுபெற்ற அளவையாளர் சாலிய விக்ரமசிங்ஹ தயாரித்த வரைபடம் இல. 238 இல் துண்டுகள் ஏ மற்றும் ஈ யும்; தெற்கில்: உத்தரவுபெற்ற நில அளவையாளர் சாலிய விக்கிரமசிங்ஹ தயாரித்த மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 238 இல் துண்டு ஈ யும் கே. ஜயசேனவின் காணியும்; மேற்கில்: கே. ஜயசேனவின் காணியும் மல்லிகா ஜயலத் மற்றும் ஏனையோரின் காணியும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1860 இன்படி பதினைந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 15பே.) அல்லது சைபர் தசம் சைபர் மூன்று ஏழு ஒன்பது ஹெக்டேயர்கள் (ஹெக். 0.0379 விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடமும் மற்றும் சகலதும் ஆகும். இது கொழும்பு காணிப்பதிவகத்தில் எல் 104/182 இல் பதிவு செய்யப்பட்டது.

அத்துடன் காணி மீதான வழி உரிமையும் ஆகும்.–

முல்லேரியாவில் அமைந்த தெல்கஹவத்த என அழைக்கப்படும் காணி, மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1860 இல் துண்டு 3 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு – வடக்கில் : அங்கொடயிலிருந்து சிறிமல் உயனவுக்கு றோட்டும்; கிழக்கில் : உத்தரவுபெற்ற நில அளவையாளர் சாலிய விக்ரமசிங்ஹ தயாரித்த வரைபடம் இல. 238 இல் துண்டு ஏ யும்; தெற்கில்: துண்டு 2ஆம் ; மேற்கில் : துண்டு 1 ஆம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1860 இன்படி எட்டு தசம் இரண்டு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 8.2பே) அல்லது சைபர் தசம் இரண்டு சைபர் ஏழு ஹெக்டேயர்கள் (ஹெக். 0.0207) விஸ்தீரணமுடையது. இது கொழும்பு காணிப்பதிவகத்தில் எல் 104/183 இல் பதிவுசெய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைபடி,

எம். எஸ். எம். நிஸாம்டீன்,
சிரேஷ்ட முகாமையாளர்.

மிலாகிரிய மேற்தரக்கிளை,
இலங்கை வங்கி

06 – 105

**இலங்கை வங்கி**

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 397)
22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழான
விற்பனை அறிவித்தல்

**சொத்து, நிலமனை ஏலவிற்பனை**

கடன் தொடர்பு இலக்கம் : 154/02.

இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின்கீழ் எடுத்த தீர்மானத்திற்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2007.01.19 ஆந் திகதிய 1481 ஆம் இலக்க வர்த்தமானியிலும், 2007.01.16 ஆந் திகதிய "தினமின", "தினகரன்", "டெயிலி நியூஸ்" பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனவுத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விவரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 56, பன்னல றோட், குளியாப்பிட்டிய என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. ஜே. அல்பியஸ் பெரேரா 2007.08.08ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**அட்டவணை**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வேஉடவில்லி ஹத்பத்து திரகந்தஹய கோரளையில் வெஹெர கிராமத்தில் கொழும்பு றோட்டில் அமைந்த வரிமதிப்பிலக்கம் 107 தற்சமயம் வரிமதிப்பிலக்கம் 229 என அடையாளமிட்ட, பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : எச். எல். குணதாச உரிமைகோரும் காணியும் ; கிழக்கில் : புஞ்சிசிங்ஙோ உரிமைகோரும் காணியும் ; தெற்கில் : லுசிநோனா உரிமைகோரும் காணியும் ; மேற்கில் : கொழும்பு றோட்டும் எல்லைகளாகக் கொண்டு பதினேழு (17) அடி நீளமும் ஐம்பத்துநான்கு (54) அடி அகலமும் விஸ்தீரணமுடைய காணியும் அத்துடன் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சலதும் ஆகும். இது குருநாகல் காணிப்பதிவகத்தில் ஏ 1474/36 இல் பதிவு செய்யப்பட்டது.

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வேஉடவில்லி ஹத்பத்து திரகந்தஹய கோரளையில் வெஹெர கிராமத்தில் கொழும்பு றோட்டில் அமைந்த வரிமதிப்பிலக்கம் "229" என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். எம். எம். பாதெனிய தயாரித்த 2001.12.11 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 628 இல் துண்டு இல. 1 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்டதும் வரிமதிப்பிலக்கம் "229" என தற்சமயம் அழைக்கப்படும் காணி அண்மைய அளவை வரைபடத்தின்படி மேற்குறிப்பிட்ட துண்டு இல. 1 மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 628 இன்படி வடக்கில் : கொழும்பு – குருநாகல் பெருந்தெருவும் ; கிழக்கில் : டபிள்யு. ஏ. எம். விஜேசிங்க உரிமைகோரும் வரிமதிப்பிலக்கம் 225 உம் ; தெற்கில் ; டி. ரி. எச். டெனி உரிமைகோரும் வரிமதிப்பிலக்கம் 237 உம் ; மேற்கில் ; ஆர். எஸ். குணசேகர உரிமைகோரும் வரிமதிப்பிலக்கம் 231 எல்லைகளாகக் கொண்டு

இரண்டு தசம் ஒன்று சைபர் (0ஏ. 0றூ. 2.10பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஈ. ஜி. ஜயவீர,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
2 ஆம் நகரக் கிளை,
குருநாகல்.

6-106

---

**மக்கள் வங்கி - தலைமையலுவலக கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் விற்பனை*

**மத்தேகொடையில் அமைந்துள்ள பெறுமதிமிக்க குடியிருப்பு ஆதனம் ஏலவிற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : இருபத்தொன்று தசம் ஆறு ஆறு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 21.66பே.)**

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- கொழும்பிலிருந்து கொட்டாவ நகருக்குச் சென்று வலப்பக்கத்திலுள்ள வீதி வழியே ஏறக்குறைய 2 கி. மீ. தூரம் செல்ல மத்தேகொடை வீடமைப்பு திட்டத்தை காண்பீர்கள். அவ்வீடமைப்புத் திட்டத்தின் பஸ்தரிப்பை கடந்து ஏறக்குயை 100 மீற்றர் செல்ல வலப்பக்கத்தில் ஈகிள் ஹவுஸ் வீதியை காண்பீர்கள். அவ்வீதிக்கு வலப்பக்கத்தில் இரண்டாவதாக இவ்வீடு உள்ளது.

மக்கள் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2007.06.15 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**-2007.04.12 ஆந் திகதிய அரச வர்த்தமானியையும் 2007.04.03 ஆந் திகதிய "தினமின", "டெய்லி நியூஸ்" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**-வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தவேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்);
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(5) விற்பனை செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (எவையேனுமிருப்பின்) ;
(6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "கொழும்பு 1, டியூக் வீதி, இல. 11, மக்கள் வங்கி - மேற்கு 1, உதவிப் பொது முகாமையாளர்" இடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 2393678, 2387068, தொலைநகல் இல. : 2435977.

உரித்து உறுதிகளையும் வேறேதேனும் குறிப்புகளையும் மேற்கூறப்பட்ட முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ஐ தண்டப் பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

ஈ. எஸ். ராமநாயக்க,
(தீவு முழுவதுக்குமான சமாதான நீதவான்),
உத்தரவுபெற்ற ஏலதாரர், நீதிமன்ற
ஆணையாளர் மற்றும் விலைமதிப்பிடுநர்.

இல. 11/55, குடாபுத்கமுவ,
அங்கொடை.
தொலைபேசி இல. :அலுவலகம் - 011-5756356
இல்லம் - 011-2419126

6-89

---

**வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி - பிரதான கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**பெறுமதிமிக்க ஆதனம் ஏலவிற்பனை**

*(கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு என். சீ. ஜயவர்தன அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2005, செத்தெம்பர் 26 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 2538 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ள கடப்பாடுடையவரான பீசமகி சேர்விஸஸ் அன்ட் இன்வெஸ்மண்ட் கம்பனி (பீவீரீ) லிமிட்டெட்யீ இனால் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்)*

வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2007, யூன் 18 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**ஆதனத்தின் விவரணம்.**-வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், பிட்டிகல் கோறளை வடக்கு, ஆனைவிழுந்தான் பற்று, ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபை எல்லைகளுக்குள் ஆரச்சிக்கட்டுவ கிராமத்தில் அமைந்துள்ளதும் "திம்பிரிகஹவத்தை" என அழைக்கப்படும்

காணியின் உள்ளிருந்தும் புறமுகமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டபிள்யூ. எல். ஜே. ஜே. பீரிஸ் அவர்களால் தயாரிக்கப்பட்டு, 1997, யூலை 7 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1007 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 2, துண்டு 3 மற்றும் துண்டு 4 என அடையாளமிடப்பட்டுள்ளதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து.

(காணியின் விஸ்தீரணம் : துண்டு 2 - 1 றூட் 35 பேர்ச்சஸ் ;
துண்டு 3 - 1 றூட் 35 பேர்ச்சஸ் ;
துண்டு 4 - 1 றூட் 35 பேர்ச்சஸ்)

**தீர்மான அறிவித்தலுக்கு**.- 2007, மாச்சு 23 ஆந் திகதிய அரச வர்த்தமானியையும் 2007, ஏப்பிறல் 10 ஆந் திகதிய "ஐலண்ட்", "திவயின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;

(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தவேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;

(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;

(4) விற்பனையில் உறப்பட்ட மொத்த விளம்பரச் செலவுகள் ;

(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;

(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தற் கட்டணம் ரூபா 2,000.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கிக்கு செலுத்த வேண்டும். மேற்கூறப்பட்டவாறு எஞ்சிய தொகை 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்து உறுதிகளையும் வேறேதேனும் குறிப்புக்களையும் "கொழும்பு 10, ரீ. பி. ஜாயா மாவத்தை, இல. 479, 'எச்என்பி கோபுரங்கள்', வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி, பிரதம முகாமையாளர் (அறவீடுகள்)" இடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும். தொலைபேசி இல. : 011-2661815, 2661816.

இரஞ்சித் எஸ். மஹநாம,
(தீவு முழுவதுக்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்
மற்றும் உத்தரவபெற்ற ஏலதாரர்.

'ஆர்எஸ்எம் ஒக்ஷன்ஸ்',
மஹநாம டிரைவ்,
இல. 474. பிட்டகோட்டே,
கோட்டே.
தொலைபேசி இல. : 2863121

6-115

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் "சுப்றீம் கோட்" புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் VI பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட விசேட வர்த்தமானி | 3,360.0 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | I வது பகுதி | 31.00 | 5.00 |
| | II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) | I வது பிரிவு | 10.00 | 5.00 |
| | II வது பிரிவு | 12.00 | 5.00 |
| | III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், 32, லோட்ஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டுக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், 32, லோட்டஸ் வீதி, கொழும்பு 1** என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தா பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.-** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்** என்பதையும், **அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது** என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை-2007**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூன்** | .. | வெள்ளி | 01.06.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.05.2007 |
| | | வெள்ளி | 08.06.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.05.2007 |
| | | வெள்ளி | 15.06.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.06.2007 |
| | | வெள்ளி | 22.06.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.06.2007 |
| | | வெள்ளி | 29.06.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.06.2007 |
| **யூலை** | .. | வெள்ளி | 06.07.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.06.2007 |
| | | வெள்ளி | 13.07.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.06.2007 |
| | | வெள்ளி | 20.07.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.07.2007 |
| | | வெள்ளி | 27.07.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.07.2007 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 03.08.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.07.2007 |
| | | வெள்ளி | 10.08.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.07.2007 |
| | | வெள்ளி | 17.08.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.08.2007 |
| | | வெள்ளி | 24.08.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.08.2007 |
| | | வெள்ளி | 31.08.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.08.2007 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007, சனவரி 01.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.